www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

FML

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

அ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5×1=5

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ________ அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
2. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. 'செங்காந்தள்' என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க.
   அ) உவமைத் தொகை ஆ) பண்புத் தொகை
   இ) உம்மைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை
4. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும், பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக் காற்றின் ஆலோலம் ____ அ) மொட்டின் வருகை
   ஆ) வனத்தின் நடனம் இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு
5. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ________
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

ஆ. பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி :- 4×1=4

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு "

6. இப்பாடல் இடம் பெற்றநூல்
   அ. நற்றிணை ஆ. முல்லைப் பாட்டு
   இ. குறுந்தொகை ஈ.தனிப்பாடல் திரட்டு
7. பாடலில் இடம் பெற்றுள்ள பொருத்தமான அணி
   அ. இரட்டுறமொழிதல்அணி ஆ. தீவகஅணி
   இ. வஞ்சப்புகழ்ச்சிஅணி ஈ. நிரல்நிறைஅணி
8. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது
   அ. சங்கப்பலகை ஆ. கடல் இ. அணிகலன் ஈ. புலவர்கள்
9. கீழ்வருவனவற்றுள் சங்கு வகை அல்லாதது எது?
   அ. வெண்சங்கு ஆ. வங்கம் இ. சலஞ்சலம் ஈ. பாஞ்சசன்யம்

இ. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க. 10×2=20

10. வசன கவிதை – குறிப்பு வரைக.
11. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
12. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக
13. தமிழ் நாட்டில் மட்டும் விளையக் கூடிய சிறு கூலங்களின் பெயர்களை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. நச்சப்படாதவன் செல்வம் – இதில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு பொருள் தருக.

15. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர்யார்?
ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக:– மயங்கிய

17. கலைச் சொல் தருக:–
அ) WHIRLWIND ஆ) FOLK LITERATURE

18. தொடரில் பொருந்தாத பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.
இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப்பூ குடி நீருக்குத் தன் மனத்தை ஏற்றும்.

19. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) மலை – மாலை ஆ) விடு – வீடு

20. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்ணில் எழுதுக.
அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண்.
ஆ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை.

21. 'மன்னுஞ் சிலம்பே மணிமேகலை வடிவே,
முன்னும் நினைவால் முடி தாழவாழ்த்துவமே'
– இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

ஈ. அடிமாறாமல் எழுதுக:– 4+2=6

22. "சிறுதாம்பு" எனத் தொடங்கும் முல்லைப் பாட்டு பாடலை எழுதுக

23. " விடல் "என முடியும் திருக்குறளை எழுதுக.

உ. எவையேனும் இரண்டு வினாவிற்கு விடையளி:– 2×4=8

24. கூத்தனைக் கூத்தன்ஆற்றுப் படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

25. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களைப் பாவலரேறு சுட்டுவன யாவை?

26. வேலோடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு, – இக்குறளில் பயின்று வரும்அணியை விளக்குக,

ஊ. விரிவாக விடையளிக்கவும். 1×7=7

27. அ, முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை எழுதுக. (அல்லது)
ஆ. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினை ' கோபல்லபுரத்து மக்கள் ' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.



Dr. G. THIRUMOORTHI
8610560810
Govt Arts College
Salem

www.Padasalai.Net

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com